**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.4/2025**

**நாள் :24.07.2026**

**எ.ம.சா.** 1 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 33 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

நான் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணை கிடைக்கப்பெற்று அனுமதி கடிதத்துடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்கிறேன். 19.06.2024 ல் ஆய்விற்கு வரப்பெற்று TN 23 BY 9905 என்ற ஆட்டோவின் ஆய்வில் அதன் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்கிறேன். ஆட்டோவின் உரிமையாளர் பெயர் ராஜா, த/பெ மணி. காப்பீடு மற்றும் அசல் பதிவு சான்று ஆய்வாளரிடம் தாக்கல் செய்யப்படவில்லை. ஆட்டோவில் எத்தனை நபர்கள் பயணம் செய்யலாம் என்றால் ஒரு ஓட்டுநர் மற்றும் மூன்று நபர்கள் பயணம் செய்யலாம். அதற்கு மேல் பயணம் செய்தால் மோட்டார் விதிகளுக்கு மாறானது என்றால் சரிதான். TN 29 AK 6697 என்ற பதிவு செய்யப்பட்ட கார் அதே தேதியில் ஆய்விற்கு வரப்பெற்றது. காப்பீடு மற்றும் அசல் பதிவு சான்று ஆய்வாளரிடம் தாக்கல் செய்யப்படவில்லை. உரிமம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஓட்டுநர் பெயர் சரவணன், த/பெ குப்புசாமி அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது.

மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்கிறேன். திருப்பத்தூர் காவல் ஆய்வாளர் இரு வாகனங்களையும் அதன் ஆவணங்களையும் ஆய்விற்கு அனுப்பினார்.

**<u>மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

ஆட்டோ மற்றும் கார் சம்பந்தப்பட்ட காப்பீடு, அசல் பதிவு சான்று மற்றும் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்படைக்கப்படவில்லை என்பதால் அவை இல்லை என்று கூறமுடியாது என்றால் சரிதான். காரின் உரிமையாளர் பெயர் புருசோத்தமன் த/பெ வஜ்ரவேல்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.